**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :OS No:94/2020 callwith 86/2021 தேதி:17.10.2024**

**வா.சா. 1 – ராமமூர்த்தி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :** ( பிரதிவாதிகள் தரப்பில்)

என் தந்தைக்கு 65 வயதாகிறது. வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு தகவல் சொன்னது என் அப்பா. என் அப்பாவை இந்த வழக்கில் விசாரணை செய்ய போகிறேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் விவரம் அனைத்தும் என் அப்பாவிற்கு தான் தெரியும் என்றால் எனக்கும் தெரியும். எனக்கு தற்போது வயது 45 ஆகும். நான் படிக்கவில்லை. எனக்கு எழுதபடிக்க தெரியாது. நான் வழக்கில் சொல்லியுள்ள குப்பையாண்டிதேவர், தவசிபெருமாள்தேவர், சின்னனதேவர் ஆகிய மூவரையும் எனக்கு தெரியும். மூவரும் இறந்துவிட்டார்கள். எப்போது இறந்துவிட்டார்கள் என்று எனக்கு தெரியாது. ஆச்சி சொல்லி இறந்த விவரம் தெரியும். எப்போது இறந்தார்கள் என்று ஞாபகம் இல்லை. என் அப்பா இறப்பதற்கு முன்பே இறந்து போனார்களா என்றால் ஞாபகம் இல்லை. பிராதில் சொல்லியுள்ள விவரங்கள் என் அப்பா சொன்னதால் அவரை விசாரித்தால் தான் உண்மை தெரியும் என்றால் சரியல்ல.சின்னனதேவர் என்பவருக்கு மூன்று பிள்ளைகள் என்றால் அவருக்கு வாரிசு இல்லை. இந்த விவரம் என் ஆச்சி சொல்லி தெரியும். எனக்கு என்ன வயது இருக்கும் போது சொன்னார்கள் என்றால் ஒரு வருடத்திற்கு முன்னால் சொன்னார். இவ்வழக்கிற்காக சின்னனதேவருக்கு வாரிசு இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் என் ஆச்சி ஒரு வருடத்திற்கு முன்பாக சொன்னதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிராதில் சொல்லியுள்ள சின்னனதேவருக்கு பெரிசன்னதேவர், திருகண்ணதேவர், வேலுதேவர் ஆகிய மூன்று ஆண்மக்கள் உள்ளார்கள் என்றால் சரியல்ல. 1944 ஆண்டில் நான் சொல்லியுள்ள வா.சா.ஆ 7 ஆவணத்தில் சின்னனதேவர் மகன் வேலுதேவர் அவருடைய மைனர் மகன் தனுஷ்கோடி சேர்ந்து தங்கச்சியம்மாளுக்கு எழுதி கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பத்திரம் பதியும் போது நானும் பிறக்கவில்லை என் அப்பாவும் பிறக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் ஆச்சி

சொல்லி தெரியும். வா.சா.ஆ 7 ஆவணத்தின் அடிப்படையில் தான் செட்டில்மெண்டு ஆவணங்களில் தங்கச்சியம்மாள் பெயர் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணமாக தாக்கல் செய்துள்ள கொடிவழிஜாபிதா உண்மையானது அல்ல என் வழக்கிற்காக கற்பனையாக புனையப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 ஆவணமான ரசீதில் என் அப்பா பெயரோ, எந்த இடத்திற்கு என்றோ இல்லை என்றால் சரிதான். என் தாத்தா பெயர் உள்ளது. என் தாத்தா பெயர் மாரியப்பதேவர். வா.சா.ஆ 1 ஆவணத்தில் மாரியப்பதேவர் என்ற பெயரே இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ஆவணத்திற்கும் இந்த சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. என் தாத்தா பெயர் சர்க்கரைதேவர். 05.04.1990 ல் என் தாத்தா இறந்துபோய்விட்டதாக வா.சா.ஆ 5 ல் உள்ளது என்றால் இருக்கலாம். என் தாத்தா இறந்த வரைக்கும் இந்த சொத்தை பொறுத்து எந்தவொரு வியாஜியமும் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. 1990 வரைக்கும் என் தாத்தா 1944 ஆண்டு ஆவணத்தை ஆட்சேபணை செய்து எந்த வழக்கும் போடவில்லை என்றும் அதை பொறுத்து எந்த ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

(மின்சாரம் தடைப்பட்டுவிட்டதால் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.